DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 511/2016

List of Witness : Lw8

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர். கேசவமூர்த்தி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கந்தசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/05/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கோவை KMCH மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சை பிரிவில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2014 ஆம் தேதி அன்று அதிகாலை 3.15 மணியளவில் கல்பனா தேவி என்பவர் சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களின் மேல்சிகிச்சைக்காக ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் இருந்து எங்கள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் 28.08.2014 ஆம் தேதி அன்று இரவு 7.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கார் மோதியதில் காயங்கள் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) இடது தொடையில் Femur எலும்பின் மேல் பகுதியிலும் நடுபகுதியிலும் எலும்பு முறிவுகள் இருந்தன.

2) இடது காலில் Tibia எலும்பில் முறிவு காணப்பட்டது.

3) இடது கால் மொட்டியில் Tibia எலும்பின் மேல்பின்புற பகுதியில் முறிவு

காணப்பட்டது.
4) இடது கால் பாதத்தில் பெருவிரலில் எலும்பு முறிவு காணப்பட்டது.
5) கீழ் முதுகு பகுதியில் இடதுபுறம் L1 முதல் L3 முதுகு எலும்பில் முறிவு காணப்பட்டது.
6) இடது நெற்றியிலும், வலது கண்ணம் மற்றும் தாடை பகுதிகளிலும் சிராய்ப்பு காயம் இருந்தது. ஸ்கேன் செய்து பார்த்ததில் மூளைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.
இதில் 1 முதல் 5 காயங்கள் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் கொடுத்தது தான். **அந்த காயச்சான்று அ.சா.அ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) அதே தேதியன்று அதே விபத்தில் காயம் அடைந்த செல்வி.அதர்சனா என்பவரை பரிசோதத்தில் கீழ்கண்டகாயங்கள் காணப்பட்டன.
1) இடது கை முட்டியில் Humerus எலும்பின் கீழ் உள்பகுதியில் முறிவு காணப்பட்டது.
2) இடது கால் பாகத்தின் 2வது எலும்பின் முறிவு காணப்பட்டது.
3) நெற்றியிலும், இடது கன்னத்திலும், இடது கையிலும் சிறிய சிராய்ப்புகளும் சிதைந்த காயங்களும் காணப்பட்டது.
இதில் முதல் இரண்டு காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் கொடுத்தது தான். **அந்த காயச்சான்று அ.சா.அ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) அதே தேதியன்று அதே விபத்தில் காயம் அடைந்த மாஸ்டர் சந்திரா ஆதித்யா என்பவரை பரிசோதனை செய்ததில்கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.
1) இடது கண்ணுக்கு மேல் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.
2) முகத்தில் சிராய்ப்புகள் காணப்பட்டன.
3) C.T.ஸ்கேன் செய்து பார்த்ததில் மூளைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.
4)வலது தொடை மற்றும் வலது இடுப்பு பகுதிகளில் கன்றி காயங்கள் காணப்பட்டது.
இந்த காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் கொடுத்தது தான். **அந்த காயச்சான்று அ.சா.அ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
மேற்சொன்ன நபர்களுக்கு சாலை விபத்தில் இவ்வாறு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

கரடுமுரடான ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்று நிலை தடுமாறி கீழே விழுந்தாலும் மேற்சொன்ன விதமான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான், வாய்ப்பு உள்ளது.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.12 18:23:33 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/05/2026